# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் (சனிக்கிழமைதோறும்) • திருவள்ளுவர் ஆண்டு 2053 • ஜனவரி 7 2023 Weekly E-paper • January 7, 2023




# தளபதியின் பின்னால் அணிவகுப்போம்

சுப.வீரபாண்டியன்

## சமூக நீதிக்கு எதிரானது EWS 10% இடஒதுக்கீடு!

வழக்கறிஞர் இராம.வைரமுத்து

## மதம்! மதவாதம்!!

தலையங்கம்

## தமிழ்நாட்டைத் ‘தமிழ்நாடு’ என்றே சொல்வோம்!

கா.சு.நாகராசன்

# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் (சனிக்கிழமைதோறும்) ● திருவள்ளுவர் ஆண்டு 2053 ● ஜனவரி 7 2023 Weekly E-paper ● January 7, 2023


# தளபதியின் பின்னால் அணிவகுப்போம்

சுப.வீரபாண்டியன்

சேதுக் கால்வாய்த் திட்டம் என்பது தமிழர்களின் 150 ஆண்டு காலக் கனவு என்றார் பேரறிஞர் அண்ணா! அந்தக் கனவை நினைவாக்கும் விதத்தில் 2005 ஜூலை மாதம் தமிழ்நாட்டில் அதற்கான அடிக்கல் நாட்டப்பட்டது. அப்போது இந்திய ஒன்றிய அரசின் கப்பல் துறை அமைச்சராக இருந்தார் டி ஆர் பாலு. அவருடைய முயற்சியில்தான் அந்தப் பணி அன்று தொடங்கியது. தமிழ்நாட்டின் எதிர்க்கட்சித் தலைவராக இருந்த தலைவர் கலைஞர், இந்தியாவின் பிரதமர் மன்மோகன் சிங், காங்கிரஸ் கட்சியின் தலைவர் சோனியா காந்தி ஆகியோர் அந்தத் தொடக்க விழாவில் கலந்து கொண்டார்கள்!

மிக விரைவாக நடந்து கொண்டிருந்த அந்தத் திட்டத்தை நிறுத்த வேண்டும் என்று சுப்பிரமணியன் சாமி போன்றவர்கள் குரல் கொடுத்தார்கள். 17.5 லட்சம் ஆண்டுகளுக்கு முன்னால் ராமர் கட்டிய பாலம் அங்கே இருக்கிறது என்றும், அதனால் அங்கு சேதுக் கால்வாய்த் திட்டத்தை நிறைவேற்றக்கூடாது என்றும் அன்று முதலமைச்சராக இருந்த ஜெயலலிதா உச்ச நீதிமன்றத்தில் வழக்கு தொடுத்தார். அதனை ஏற்றுக்கொண்டு 2007 ஆகஸ்ட் மாதம் உச்ச நீதிமன்றம் அந்தத் திட்டத்திற்கு தடை விதித்து விட்டது!

ஏறத்தாழ முக்கால் பங்கு வேலை முடிந்த நிலையில் அத்திட்டம் நிறுத்தப்பட்டது. பிறகு பலமுறை முயன்றும் அதனைத் தொடர முடியவில்லை. 2014 ஆம் ஆண்டில் பாஜக அரசு ஏற்பட்ட பிறகு அது தொடர்பான வேலைகள் எதுவும் நடக்கவில்லை. 2020 இல் நாடாளுமன்றத்தில் திமுக அணியின் தலைவர் டி ஆர் பாலு இது குறித்துக் கேள்வி எழுப்பினார். ஆனால் 2021 இல் அந்தத் திட்டம் கைவிடப்பட்டதாக மோடி அரசு அறிவித்துவிட்டது.

தமிழ்நாட்டின் மூலமாக இந்தியாவிற்கு வரவிருந்த மிகப்பெரிய பொருளாதார நன்மை, வேலை வாய்ப்பு ஆகியன தடைப்பட்டு விட்டன!

இந்தியாவின் கிழக்கே உள்ள வங்கக் கடலில் இருந்து, மேற்கில் இருக்கும் அரபிக் கடலுக்குச் செல்வதற்கு ஒவ்வொரு முறையும் கப்பல்கள் 434 கடல் மைல்களைக் கடக்க வேண்டி இருக்கிறது. இலங்கையை முழுவதுமாகச் சுற்றி, மேற்கில் அரபிக் கடலுக்கு வர வேண்டிய நிலைதான் இன்றும் இருக்கிறது. ஆனால் சேதுக்கால்வாய்த் திட்டம் நிறைவேற்றப்படுமானால், 167 கிலோ மீட்டர் தொலைவில் நாம் மேற்குக் கரையை அடைந்து விட முடியும்!

பயண நேரம் மற்றும் பயணத் தூரம் ஆகியன பாதிக்கும் கீழாக குறையும். அதன் காரணமாக எரிபொருள் செலவு குறையும். எரிபொருள் செலவு குறையும் போது சரக்குகளின் விலையும் குறையும். அதனால் பொருளாதார நன்மைகள் ஏற்படும். ஏராளமான மக்களுக்குப் புதிய வேலை வாய்ப்புகளும் கிடைக்கும். இத்தனை நன்மைகளையும் இராமரின் பெயரால் சீரழித்து விட்டார்கள் என்பது வேதனையான உண்மை.

ஆனால் இன்றைக்கு என்ன நடந்திருக்கிறது? அன்று நாம் என்ன கூறினோமோ, அதை இன்றைக்கு இஸ்ரோ எடுத்துச் சொல்லி இருக்கிறது.



ராமர் பாலம் என்று அங்கு எதுவும் இருப்பதற்கான ஆதாரம் இல்லை என்று இஸ்ரோ சொல்லி இருப்பதை, நாடாளுமன்றத்தில் ஒன்றிய அமைச்சர் ஜிதேந்திரசிங் கூறி உள்ளார்.

“17 லட்சம் ஆண்டுகளுக்கு முன்னால் மனிதர்கள் எங்கே இருந்தார்கள்? எதற்காகப் பாலம் தேவைப்பட்டது? ராமர் எந்தப் பொறியியல் கல்லூரியில் படித்தார்?” என்று தலைவர் கலைஞர் அன்று அடுக்கடுக்கான கேள்விகளை வைத்த போது, அதற்கு விடை சொல்ல முடியாதவர்கள் - குறிப்பாக வடநாட்டுச் சாமியார்கள் - கலைஞரின் தலையை சீவிக் கொண்டு வருவோம் என்று கூச்சலிட்டார்கள். இன்றைக்கு நாம் சொன்னது தான் உண்மை என்பதை அறிவியல் உலகம் வழிமொழிந்திருக்கிறது

இப்போதாவது சேதுக்கால்வாய்த் திட்டத்தை மீண்டும் நாம் தொடக்க வேண்டும். டி. ஆர். பாலு அவர்களின் “பாதை மாறா பயணம்” என்னும் நூல் வெளியீட்டு விழாவில் உரையாற்றிய தமிழ்நாட்டின் மாண்புமிகு முதலமைச்சர் இந்தக் கருத்தை அழுத்தமாகச் சொல்லி இருக்கிறார்!

அவருடைய கருத்தை திமுக மட்டும் இல்லை, மக்கள் எதிர்காலத்தில் அக்கறை உள்ள ஒவ்வொருவரும் நாடாளுமன்றத்தில் எதிரொலிக்க வேண்டும்.

வெளிநாடுகளில் பனாமா கால்வாய், சூயஸ் கால்வாய் போன்றவைகள் உருவாக்கப்பட்ட பிறகு எவ்வளவு பெரிய பொருளியல் வளங்கள் கூடியிருக்கின்றன என்பதை நேராகப் பார்க்கும் வாய்ப்பை பெற்றிருக்கிறோம். அந்த நன்மைகள் எல்லாம் தமிழ்நாட்டிற்கும் வர வேண்டாமா? வளம் பெற வேண்டாமா? எனவே சேதுக்கால்வாய்த் திட்டத்தை மீண்டும் நடைமுறைப்படுத்துவதற்கான அழுத்தத்தை தமிழ்நாடு அரசும், தமிழ்நாடு மக்களும் ஒன்றிய அரசுக்குக் கொடுக்க வேண்டும்.

நம் முதல்வர் அதில் உறுதியாக இருக்கிறார் என்பது நமக்கான பெரும் மகிழ்ச்சி! ஆம் அறிஞர் அண்ணாவின் கூற்றுப்படி, தமிழ்நாட்டு மக்களின் 150 ஆண்டு காலக் கனவை நம் தலைமுறையிலாவது நிறைவேற்றியாக வேண்டும். தலைவர் தளபதியின் பின்னால் அனைவரும் அணிவகுப்போம்! ●

# சமூக நீதிக்கு எதிரானது EWS 10% இடஒதுக்கீடு!


வழக்கறிஞர் இராம.வைரமுத்து

இடஒதுக்கீடு என்பது இது வரை எந்த சமூக நீதி அடிப்படையில் வாய்ப்பு மறுக்கப்பட்டதோ அதே சமூக நீதி அடிப்படையில், வாய்ப்பு மறுக்கப்பட்டவர்களுக்கு முன்னுரிமை அளிக்க இந்திய அரசியலமைப்புச் சட்டம் அளித்த ஒரு ஏற்பாடு ஆகும். அன்றே பொருளாதார அடிப்படையிலும் இடஒதுக்கீடு வழங்கப்பட வேண்டும் என்ற கோரிக்கை எழுந்த போது பண்டிதர் ஜவஹர்லால் நேரு, அண்ணல் அம்பேத்கர் உள்ளிட்ட தலைவர்களும், அரசியலுக்கு அப்பாற்பட்டு சமூக ஆர்வலர்களும், அறிவுத்துறையினரும் இது குறித்து விரிவாகவும், ஆழமாகவும் விவாதித்து இறுதியாக பொருளாதார நிலையை ஒரு அளவுகோலாகக் கருதக்கூடாது, சமூக அந்தஸ்தை அளவுகோலாகக் கருதுவதே உண்மையான ஜனநாயகம் என்ற முடிவுக்கு வந்தனர். அரசியலமைப்புச் சட்டத்தில் இடஒதுக்கீடு அவ்வாறே உறுதி செய்யப்பட்டது.

இந்தியாவில் ஒருவருடைய பிறப்பின் அடிப்படையில் உருவாக்கப்பட்ட பாகுபாடு அவருக்குச் சமூகம், அரசியல், பொருளாதாரம், கலாச்சாரம் போன்ற அனைத்து நிலைகளிலும் பாதிப்பை ஏற்படுத்துகிறது. குறிப்பாக நாட்டின் குடியரசுத் தலைவர் பொறுப்பு வகித்த போது மாண்புமிகு இராம்நாத் கோவிந்த் கோவிலுக்குள் நுழைய அனுமதி மறுக்கப்பட்டதும், இன்று புதுக்கோட்டை மாவட்டம் இறையூரில் நடப்பதும் நாம் அறிந்ததே. இவ்வாறாக பாதிக்கப்பட்டப் பல சமூகங்களை அடையாளம் கண்டு, அவர்களுக்கான நீதியை உறுதி செய்வதே சமூக நீதிக் கொள்கையின் அடிப்படை. பாதிக்கப்பட்ட இம்மக்கள் கல்வி, தொழில், அரசியல் உள்ளிட்ட அனைத்துத் துறைகளிலும் நன்கு உயர்ந்திட, இடஒதுக்கீடு உறுதி செய்யப்பட வேண்டும் என்பதுதான் சமூகநீதியின் சித்தாந்தம்.

சமூகநீதியின் அடிப்படையைத் தகர்த்திடும் வகையில், பா.ஜ.க அரசால் பொருளாதாரத்தில் நலிந்த பிரிவினருக்கான (EWS) இடஒதுக்கீடு 10% அளிக்க ஏதுவாக இந்திய அரசியலமைப்புச் சட்டத்தில் 103வது திருத்தம், 2019 ஜனவரியில் நாடாளுமன்றத்தில் கொண்டு வரப்பட்டது. இதற்கு எதிராக தி.மு.க உள்ளிட்ட கட்சிகள் உச்சநீதிமன்றத்தில் தொடர்ந்த வழக்கை தலைமை நீதிபதி யு.யு.லலித் தலைமையில் நீதிபதிகள் ரவீந்திரா பட், தினேஷ் மகேஷ்வரி,எஸ்.பி.பர்திவாலா, பெல்லா திரிவேதி ஆகியோர் அடங்கிய அமர்வு விசாரித்தது. நீதிபதிகள் தினேஷ் மகேஷ்வரி, எஸ்.பி.பர்திவாலா, பெல்லா திரிவேதி ஆகியோர் EWS இடஒதுக்கீட்டிற்கு ஆதரவாகவும், தலைமை நீதிபதி யு.யு.லலித், நீதிபதி ரவீந்திரா பட் ஆகியோர் EWS இடஒதுக்கீட்டிற்கு எதிராகவும் தீர்ப்பளித்தது.

மேலோட்டமாக பார்க்கும் போது, EWS இடஒதுக்கீடு இதர பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட, பழங்குடி மக்களுக்கு வழங்கப்படும் இடஒதுக்கீட்டில் எந்த பாதிப்பையும் ஏற்படுத்தாது என்று தோன்றும். ஆனால் உண்மை அதுவல்ல. இதுவரை இவர்களுக்கு ஒன்றிய அளவில் 49.5% இடஒதுக்கீடும், தமிழ்நாட்டில் 69% இடஒதுக்கீடும் அமலில் உள்ளது. எஞ்சியவை பொதுப்போட்டி இடங்கள். தகுதி அடிப்படையில் இடஒதுக்கீடு பிரிவினர் இதில் இடங்களை பெறலாம். ஆனால் 10% EWS இடஒதுக்கீடு அமலான பிறகு பொதுப் போட்டி இடங்கள் குறைந்துள்ளது.



ஏற்கனவே பொதுப் போட்டியில் உள்ள பெரும்பான்மை இடங்களை உயர் ஜாதியினர்தான் பெறுகின்றனர். தப்பித் தவறி பொதுப் போட்டிக்குள் மற்ற இடஒதுக்கீடு பிரிவினர் பெறும் இடங்களை EWS கபளீகரம் செய்கிறது.

பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட, பழங்குடியினருக்கான இடஒதுக்கீடு பெரும் போராட்டங்களினால் தான் சாத்தியமானது. ஆனால் EWS இடஒதுக்கீடு எவ்வித போராட்டமும் இன்றி அவர்களுக்கு தங்கத் தாம்பலத்தில் வைத்து தரப்பட்டுள்ளது. இதற்கு ஆதாரமாக சொல்லப்படும் சின்ஹோ ஆணையம் குறிப்பிட்டுள்ள "NSSO" (National Sample Survey Organisation) புள்ளி விவரம் ஏற்புடையது அல்ல. 2004ஆம் ஆண்டு இந்தியா போன்ற பெரிய நாட்டில் வெறும் 1,25,000 குடும்பங்களை மட்டுமே NSSO சந்தித்து ஆய்வு செய்தது என்பதால் அது உண்மை நிலவரத்தை பிரதிபலிக்க வாய்ப்பு இல்லை.

EWS இடஒதுக்கீடு பொருளாதார அடிப்படையில் அனைத்து ஜாதியினருக்கும் வாய்ப்பளிக்காமல் பார்ப்பன உயர்ஜாதியினருக்கு மட்டுமே இடஒதுக்கீடு வழங்கப்படுகிறது. இந்த பிரிவினை இந்திய அரசியலமைப்புச் சட்டத்திற்கு விரோதமானது என்று தலைமை நீதிபதி யு.யு. லலித் - நீதிபதி ரவீந்திரா பட் தங்களது தீர்ப்பில் கூறியிருந்தது குறிப்பிடத்தக்கது. EWS பிரிவில் பல்வேறு ஜாதியினர் இருப்பதாக சொல்லப்பட்டாலும் மக்கள் தொகையில் அவர்கள் 7% மட்டுமே. அவர்களுக்கு அளிக்கப்பட்டுள்ள 10% இடஒதுக்கீடு என்பது மிக அதிகம். இதன் மூலம் இறுதியில் பார்ப்பனர்கள் மட்டுமே பயன் பெறுவார்கள் என்பது உள்ளங்கை நெல்லிக்கனி.

நாள் ஒன்றுக்கு கிராமப்புறத்தில் ரூ.27 சம்பளம் மற்றும் நகர்ப்புறத்தில் ரூ.33 சம்பளம் வாங்குபவர்கள் மட்டுமே வறுமைக் கோட்டுக்கு கீழ் உள்ளவர்கள் என்று ஒன்றிய அரசின் நிதித் துறை சொல்கிறது. ஆனால் நாள் ஒன்றுக்கு ரூ.2000க்கும் மேல் சம்பளம் (EWS இடஒதுக்கீட்டிற்கான வருமான வரம்பு -

ரூ. 8 லட்சம் ஆண்டு வருமானம், 5 ஏக்கர் நிலம், 1000 சதுர அடி வீடு) வாங்கும் உயர் ஜாதி (பார்ப்பன) ஏழைகள் என்று பா.ஜ.க அரசு சொல்வது வியப்பிற்குரியது.

இவை அனைத்திற்கும் மேலாக, கல்வி மற்றும் வேலைவாய்ப்பில் மற்ற இடஒதுக்கீடு பிரிவினருக்கான கட் ஆப் மதிப்பெண்களை விட EWS பிரிவினரின் கட்ஆப் குறைவாக இருப்பதை வைத்தே பார்ப்பனரல்லாத இந்துக்களுக்கு ஏற்படும் பாதிப்பை நாம் உணர்ந்து கொள்ள முடியும். இரயில்வே துறையின் டி குரூப் பணி நியமனம் தொடர்பாக தற்போது வெளியாகி உள்ள அறிவிப்பு இதற்கான எடுத்துக்காட்டு ஆகும்.

இந்துக்களின் பாதுகாவலராக தன்னை காட்டிக் கொள்ளும் பா.ஜ.க உண்மையில் பார்ப்பனர்களுக்கு மட்டுமே ஆதரவானவர்கள். பார்ப்பனரல்லாத இந்துக்களுக்கு அவர்கள் விரோதமானவர்கள் என்பதை அவர்கள் கொண்டு வந்துள்ள EWS இடஒதுக்கீடு மூலம் அறிந்து கொள்ளலாம்.

EWS இடஒதுக்கீடு மூலம் பார்ப்பனரல்லாத இந்துக்களுக்கு ஏற்படும் பாதிப்புகளை அவர்களுக்கு உணர்த்தி நாம் விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும். மக்கள் மன்றத்தில் இதற்கான தீர்ப்பு திருத்தி எழுதப்பட வேண்டும்.

EWS இடஒதுக்கீடு ஒழிக்கப்படும் நாள் எந்நாளோ அந்நாளே பொன்னாள் ! ●

*தமிழராய் வேர் பிடி! உலகெலாம் கிளை விரி!*

# கருஞ்சட்டைத் தமிழர்

## மதம்! மதவாதம்!!

அண்மையில் தமிழ்நாட்டின் முதலமைச்சர் ஸ்டாலின் "நாங்கள் மதவாதத்திற்குத்தான் எதிரிகளே தவிர, மதத்திற்கு எதிரிகள் அல்ல" என்று பேசியிருக்கிறார்.

ஜவகர்லால் நேரு, "வின்சன்ட் ஸ்மித் 'இந்துயிசம்' மற்றும் 'இந்து மயமாக' போன்ற வர்த்தைகளைப் பயன்படுத்தியுள்ளார். இந்தியக் கலாச்சாரம் என்ற ஆக அகலமான அர்த்தத்தில் அவை பயன்படுத்தலால் அன்றி, அவ்வாறு அவற்றைப் பயன்படுத்துவது சரி என்று நான் நினைக்கவில்லை. மேலதிக, குறுகிய, குறிப்பாக மதரீதியான கருத்தோடு அவை தொடர்பு படுத்தப்பட்டு இருந்தால், அது தவறாக வழிநடத்தும்." என்று அவரின் The Discovery of India நூலில் சொல்லியிருக்கிறார்.

அயோத்தியில் ராமர் கோயில் 2024, ஜனவரி1ஆம் தேதி முதல் மக்கள் பயன்பாட்டிற்குத் திறக்கப்படும் என்று ஒன்றிய உள்துறை அமைச்சர் அமித்ஷா அறிவித்துள்ளார்.

அதையடுத்து ஏப்ரல், மே மாதங்களை ஒட்டி நாடாளுமன்றப் பொதுத் தேர்தல் வரவிருக்கிறது என்பது கவனிக்கத்தக்கது.

ஆர்.எஸ்.எஸ், அதன் முகமூடியான பா.ஜ.க வின் சித்தாந்தமே இந்துத்துவா என்ற மதவாதம்தான் என்பதற்கு அயோத்தி ஒரு சான்று.

தமிழ்நாட்டில், ஆளுநர் தொடர்ந்து தமிழ்நாட்டு அரசியலை, வர்ணாசிரம, மதவாதப் பாதையை நோக்கிப் பேசி வருவது ஒற்றுமைக்கு ஆபத்தை விளைவிக்கும்.

பா.ஜ.க தலைவர் அண்ணாமலை வரம்பற்றப் பொய்களைக் கூறுவதும், ஊடகவியலாளர்களைத் தரமற்று, மிரட்டும் தொனியில் பேசுவதும் மதவாதச் சக்தியின் அடையாளமாகத் தோன்றுகிறது.

இந்த நிலையில் மதத்திற்கு நாம் எதிரல்ல, மதவாதத்தை எதிர்ப்போம் என்று நம் முதலமைச்சர் சொல்லியிருப்பது மகிழ்ச்சியைத் தருகிறது.

2024 ஆம் ஆண்டுத் தேர்தலில், இந்துத்துவ மதவாதச் சக்திகளைத் தோற்கடிக்க வேண்டும், தோற்கடிப்பார்கள் மக்கள்!


ஆசிரியர்:
சுப.வீரபாண்டியன்
பொறுப்பாசிரியர்
எழில்.இளங்கோவன்
ஆசிரியர் குழு:
உதயகுமார்
வெற்றிச்செல்வன்
சாரதா தேவி
வெளியீடு:
திராவிட இயக்கத் தமிழர் பேரவை

இணையதளம்:
www.keetru.com,
www.karunchattaibooks.com
மின் அஞ்சல்:
karunchattai@gmail.com
டுவிட்டர்: suba_vee
தொடர்புக்கு
120 என்.டி. ராமராவ் தெரு,
ரங்கராஜபுரம், கோடம்பாக்கம்
சென்னை– 600 024,
தொலைபேசி: 044-2472 6408









# தமிழ்நாட்டைத் ‘தமிழ்நாடு’ என்றே சொல்வோம்!

கா.சு.நாகராசன்

ஒருவன் உள்ள வரையில் - குருதி
ஒரு சொட்டுள்ள ஒருவன் உள்ளவரையில்...
வஞ்ச நரிகள் புலிக்காட்டை ஆளுமோ?
வடக்கர் எம்மை ஆளவும் மாளுமோ?
அஞ்சும் வழக்கம் திராவிடர்க் கில்லை
ஆள்வலி தோள்வலிக்குப் பஞ்சம் இல்லை!
ஒருவன் உள்ளவரையில்...

- இவை, புரட்சிக் கவிஞர் பாரதிதாசனின் எச்சரிக்கை வரிகள். இது அன்றைக்கும், இன்றைக்கும் மட்டுமல்ல என்றைக்கும் பொருந்துகிற வரிகள்.

சத்தியமூர்த்திகளையும், ராஜகோபாலாச் சாரிகளையும், வைத்தியநாத ஐயர்களையும் எதிர்கொண்டு நின்று வளர்ந்ததுதான் திராவிட இயக்கம்.




மொகலாய படையெடுப்பு, ஆங்கிலேயப் படையெடுப்பு என்றெல்லாம் எழுதுகிற வரலாறு, ஆரியர் வருகை என்கிறது. இதுதான் திட்டமிட்ட வரலாற்று மோசடி. 2004 ஆம் ஆண்டு நாடாளுமன்ற மக்களவைத் தேர்தலுக்காக ஒன்றியம் தயாராகிக் கொண்டிருந்தது.

இந்திய அளவில் அரசியல் அரங்கின் போக்கையே மாற்றுகிற வல்லமையோடு அன்றைக்கு அண்ணா அறிவாலயத்தில் கலைஞர் சொன்னார் “எங்களுடைய பிரதமர் வேட்பாளர் சோனியா காந்தி” என்று. மொத்த இந்தியாவும் பதறியது. அன்றைக்கு ஆட்சி கட்டிலில் இருந்த பாஜக இன வெறுப்பு அரசியலை உக்கிரமாக கையிலெடுத்தது.

சோனியா காந்தி இத்தாலியை பூர்வீகமாக கொண்டவர் என்பதால், “அந்நியர்களை அனுமதியோம்” என்கிற முழக்கத்தை முன்னெடுத்தது பாஜக.

ஊடகவியலாளர்கள் தலைவர் கலைஞர் அவர்களிடத்தில் கேட்டார்கள் “அந்நியரை ஏற்க மாட்டோம் என்கிறார்களே!”

கலைஞர் தமக்கேயுரிய இயல்பான, கேலியான புன்னகையோடு பதில் அளித்தார் “அன்னியர் யார் என்பதற்கான வரையறையை எங்கிருந்து தொடங்கலாம்? எத்தனை ஆண்டுகளில் இருந்து தொடங்கலாம்?” இந்த எதிர் கேள்வி பாஜகவின் ஆட்சியையே வீழ்த்தியது என்பதுதான் கடந்த கால வரலாறு.

இந்த மண்ணுக்குள் நுழைந்து ஆக்கிரமித்திருக்கிற அந்நியர்கள் ஆரியர்களே என்ற வரலாற்றுப் பார்வை 2004 ஆம் ஆண்டு அரசியல் முடிவுகளை மாற்றியது.

இப்போது தங்கள் புராணப் புரட்டுகளை எல்லாம் வரலாறு என்றும், வரலாறுகளை எல்லாம் இருட்டடிப்பு செய்தும் அதிகாரத்தில் இருந்தபடி ஏகடியம் பேசுகிற கூட்டத்தின், தமிழ் நாட்டின் பிரதிநிதியாக இருக்கிறார் ஆளுநர் ஆர்.என்.ரவி.

நூறு ஆண்டுகளுக்கு முன்னால் தமிழ்நாடு விரட்டியடித்த சனாதன தர்மத்தை தூக்கிக்கொண்டு, தமிழ்நாட்டு தெருக்களில் கதாகாலட்சேபம் செய்வது போல பேசிக் கொண்டு இருக்கிறார் அவர்.

தமிழ்நாடு என்கிற பெயர், அந்த ராஜ்பவன் சுகபோகியின் தூக்கத்தை கெடுக்கிறது. பெரியார் சொல்வார் “கள்ளு குடித்தவனை தேள் கொட்டியது போல” என்று அப்படி அதிகார போதையோடு சனாதன வெறியேறிய ரவியானவர் பேச்சு உளறலாக இருக்கிறது.

தமிழ்நாடு என்ற பெயர் அறிஞர் அண்ணாவால் சட்ட மன்றத்தில் தீர்மானமாக எந்த எதிப்பும் இல்லாமல் நிறைவேற்றி, அன்றைய குடியரசுத் தலைவரால் ஒப்புதல் வழங்கி எங்கள் மண்ணுக்குச் சூட்டப்பட்ட அதிகாரப்பூர்வப் பெயர் என்பது கூடத் தெரியாமல், தமிழ்நாட்டைத் தமிழகம் என்று முதலில் சொல்லி, பின்னர் தட்ஷ்சன் பிரதேஷ் என்று மாற்ற முயல்கிறாரா ஆளுநர் ரவி.

இது அடிமைகள் ஆட்சியின் காலம் அல்ல. நீங்கள் சொல்வதைக் கேட்க. டில்லி ஏகாதிபத்தியத்தை உலுக்கி எடுத்த திராவிட இயக்கத்தின் வழித்தோன்றல் ஆட்சி, திராவிட மாடல் ஆட்சியின் காலம், இது. புரட்சிக் கவிஞர் சொல்வது போல, ஒருவன் உள்ளவரையில்... எவருக்கும் அஞ்சும் வழக்கம் திராவிடர்க்கு இல்லை!

இது, தமிழ்நாடு! தமிழர் நாடு! ஓங்கிச் சொல்வோம்

தமிழ்நாடு வாழ்க!

Published By Dravida Iyyakka Tamilar Peravai. Editor Suba. Veerapandian